www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

**12 - STD**

நேரம்: 3.00

## பொதுத்தமிழ்

பதிவு எண். 1 2 4 0 2

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14 x 1 = 14

1. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

அ) மயிலை சீனி.வேங்கடசாமி ஆ) ஐராவதம் மகாதேவன் இ) சி.மணி ஈ) தி.சு.நடராஜன்

2. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ______

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, உயர்திணை ஈ) சிரவுத்திணை, அஃறிணை

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க

அ) உரிமைத்தாகம் - பாரசீகக் கவிஞர்

ஆ) அஞ்ஞாடி - பூமணி

இ) ஜலாலுத்தீன்ரூமி - பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்பமுறை - சாகித்திய அகாதெமி

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2, இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

4. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு.

அ) 1782 ஆ) 1682 இ) 1872 ஈ) 1882

5. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம் இ) தமிழில் நிகண்டு ஈ) தமிழ்விடு தூது

6. உப்பு விளையும் களத்திற்கு _____ என்று பெயர்

அ) கலம் ஆ) தளம் இ) அள்ளல் ஈ) அளம்

7. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

8. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்.

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

9. நகுலன் அவர்களின் அயற்பெயர்

அ) ராஜகோபாலன் ஆ) எத்திராசலு இ) டி.கே.துரைசாமி ஈ) முகமது ராவுத்தர்

10. தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசினைப் பெற்ற வெ.இறையன்பு எழுதிய நூல்?

அ) ஏழாவது அறிவு ஆ) உள்ளொளிப் பயணம் இ) வாய்கால் மீன்கள் ஈ) இலக்கியத்தில் மேலாண்மை

11. கூற்று 1 - ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடைப்பண்பை விளக்கும் இலக்கியங்களாக இருக்கின்றன.

கூற்று 2 - கொடைப் பண்பால் பெயர்பெற்றிருக்கிற வள்ளல்கள் அறுவர்

அ) கூற்று இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு

12. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு ?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) செய்நன்றி

13. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

14. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

## பகுதி - II பிரிவு - 1

II. **ஏதேனும் 3 வினாக்களுக்கு விடை தருக.** **3 x 2 = 6**

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
16. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
17. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

## பிரிவு - 2

**ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. ஒருமுக எழினி, பெருமுக எழினி - குறிப்பு எழுதுக.
20. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.
21. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

## பிரிவு - III

III. **ஏதேனும் 7 வினாக்களுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்
23. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.
24. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

    அ) பேசுவார் ஆ) தொழுதனர்
25. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

    அ) வெங்கதிர் ஆ) பூம்பாவாய்
26. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

    வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்
27. ஊண் - ஊன் - பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

    ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லவற்றை கற்று கொடுக்கும்.
29. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

    அலை, அளை, அழை
30. பின்வரும் கலைச்சொல்லிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தருக.

    அ) Fiction ஆ) Animation

## பகுதி - III
## பிரிவு - I

III. **ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31. 'வருபவர் எவராயினும்

    நன்றி செலுத்து - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.



CS CamScanner

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
34. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

## பிரிவு - 2

**III. ஏதேனும் 2 வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8**

35. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
36. ஏதேனும் இரண்டு பெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
37. 'மூன்றான காலம் போல் ஒன்று' - எவை? ஏன்?
38. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

## பிரிவு - 3

**ஏதேனும் 3 வினாக்களுக்கு விடை தருக. 3 x 4 = 12**

39. ஏகதேச உருவக அணியை சான்று தந்து விளக்குக. (அல்லது)
அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.
40. நெய்தல் திணை (அல்லது) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக.
(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்குக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் ! - கவிமணி தேசிய விநாயகம்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடிசறுக்கும் ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
43 படைபாற்றல் திறன் (கவிதை)
மனித நேயம் அல்லது பள்ளி

<u>காது கேளாதவர்களுக்கான மாற்று வினா</u>

ஆய்வு நெறிமுறைகளிலும் அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளைக் கையாண்டவர். ம.இராசமாணிக்கனார் சங்காலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர். சிந்துவெளி நாகரிகம் பற்றி தமிழில் முதல்முதலில் 'மொஹெஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' என்ற நூலலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே.உமாமகேசுவரன். ந.மு.வேங்கடசாமி. ஆகியோராலும் உ.வே.சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் தோழர் வரலாறு, பல்லவர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி போன்ற பல நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர்.

1. சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர் யார்?



CS CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

2. மா.இராசமாணிக்கனார் முதன்முதலில் இயற்றிய நூல் எது?
3. சோழர் வரலாற்றை ஆராய்ந்த காலம்?
4. காந்தைத் தமிழ்ச்சங்கத்தினரின் பெயர்களை எழுதுக.

## பகுதி - IV

3 x 6 = 18

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. - எவ்வாறு? விளக்குக.

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46. அ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

ஆ) 'சாலை விபத்தில்லாத தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

IV. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** 4 + 2 = 8

அ) 'துன்பு உளதெனின்' - எனத் தொடங்கும் கம்பராமாயணம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'உடைத்து' - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com